ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2107/24 - 2019 ජනවාරි මස 23 වැනි බදාදා - 2019.01.23

*2107/24 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்**

*15(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 15(1) ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லைக்குள்ளான கீழே விபரிக்கப்பட்ட காணியினை இன்றிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இக்கட்டளை மூலம் உடமையாக்குகின்றேன்.*

*பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா. உ.),*
*மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.*

*மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,*
*17 மற்றும் 18 ஆவது மாடிகள்,*
*"சுஹுறுபாய"*
*சுபூத்திரபுர வீதி,*
*பத்தரமுல்லை,*
*2019, சனவரி 18.*

**அட்டவணை**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெஹிவளைப் பிரதேச செயலாளர் பிரிவு, தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லையிலுள்ளான கல்கிஸ்ஸ கிராமத்தில் அமைந்துள்ள கல்கிஸ்ஸவத்த என்றழைக்கப்படும் காணியானது- வடக்கு : புகையிர வீதியையும் ; கிழக்கு : காலி வீதியையும் ; தெற்கு : புகையிரத வீதி அமைந்துள்ள பி. ஜே. பெரேரா உரிமை கோரும் மதிப்பீட்டு இல. 8 இனைக் கொண்ட காணியையும் ; மேற்கு : பழைய புகையிரத வீதியையும் எல்லைகளாகவும் (0.0811 ஹெக்.) விஸ்தீரணத்தையும் கொண்டுள்ள காணியானது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எம். டபிள்யு. எல். ஐ. ஐ. பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க மாதிரிப்பட இல. 1202 இல் காணித்துண்டு இல. 03 எனக் குறிக்கப்பட்டுள்ளது.*

*02-250*